**இந்திய உயர் ஆணையம்**
**கோலாலம்பூர்**

# மலேசியாவிலுள்ள சட்டவிரோதக் குடியேறிகளுக்கு பொதுமன்னிப்புத் திட்டம்

மலேசியாவில் உள்ள சட்டவிரோத குடியேறிகள் தங்களின் சொந்த நாட்டுக்கே திரும்பிச் செல்ல ஏதுவாக மலேசிய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சு 'பொது மன்னிப்பு' திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆகஸ்ட் 1 முதல் டிசம்பர் 31, 2019 வரை அமலாக்கத்தில் இருக்கும் இத்திட்டத்தை பயன்படுத்தி, மலேசியாவில் முறையான ஆவணங்கள் இன்றி அல்லது அனுமதிக்கப்பட்ட கால வரையறையை மீறி தங்கியிருக்கும் சட்டவிரோத குடியேறிகள் தங்களின் சொந்த நாட்டிற்குத் திரும்பலாம். இந்தத் திட்டத்தின் அடிப்படை கூறுகள் பின்வருமாறு:

- மலேசிய குடிநுழைவு துறையால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள இத்திட்டத்தில் **ஏஜெண்டுகள் நியமிக்கப்படவில்லை.**
- வெளிநாட்டவர்கள் முறையான பயண ஆவணங்களைக் கொண்டிருக்க வேண்டும். எ.கா: **கடப்பிதழ்** (passport) / **அவசர சான்றிதழ்** (Emergency Certificate)
- வெளிநாட்டவர்கள் **7 நாட்களில்** பயணம் செய்வதற்கான **டிக்கெட்டை** வைத்திருக்க வேண்டும்.
- அபராதமாக **700 வெள்ளி** செலுத்த வேண்டும்.
- இந்தத் திட்டம் தொடர்பான மேல் விவரங்கள் https://www.imi.gov.my/images/fail_pengumuman/2019/7_Jul/faq-eng.pdf எனும் அகப்பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு தகுதி பெற்ற இந்திய நாட்டுப் பிரஜைகள் மேல்காணும் அகப்பக்கத்தில் இடம்பெற்றுள்ள பல்வேறு குடிநுழைவு துறைகளில் ஒன்றில் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

முறையான பயண ஆவணங்கள் இல்லாத இந்திய நாட்டவர்கள், அவசர சான்றிதழ் **(Emergency Certificate)** விண்ணப்பத்திற்கு இந்திய உயர் ஆணையத்தின் அயலாக்க ஏஜென்சியை M/s BLS International Limited, Level 4, Wisma Tancom, 326-328 Jalan Tuanku Abdul Rahman, 50100 Kuala Lumpur, (தொலைபேசி எண்: 03-26022474 மற்றும் 03-26022476) எனும் முகவரியில் நாடலாம்.

மலேசியாவில் கால வரையறையை மீறி தங்கியிருக்கும் இந்திய நாட்டுப் பிரஜைகள், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இந்தியாவிற்கு திரும்புமாறு இந்திய உயர் ஆணையம் வலியுறுத்துகிறது.

***

**இந்திய உயர் ஆணையம், கோலாலம்பூர்**
**1 ஆகஸ்ட் 2019**